# முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருநெல்வேலி

## O.S.No. 163/2025

23.06.2026 PW–2

| | |
|---|---|
| பெயர் | திரு. சாந்தகுமார் |
| தபெ. | திரு. சிவசங்கர் |

**சாட்சி அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. வாதி முத்துகுமார் எனக்கு தூரத்து சொந்தகாரர் ஆவார். அழகம்மாள் வாதிக்கு எழுதிக் கொடுத்த செட்டில்மெண்ட் பத்திரத்தில் நான் சாட்சி கையொப்பம் போடவில்லை என்றால் சரிதான். அதனால் எனக்கு செட்டில்மென்ட் தொடர்பான விவரங்கள் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான் ஆனால் வாதியின் தாயார் சொல்லி எனக்கு தெரிய வந்தது. கதவு எண். 2B உள்ள வீட்டில் வாதி மற்றும் பிரதிவாதி ஆகியோர் ஒவ்வொரு பகுதியில் குடியிருந்து வந்தார்கள் என்றால் தவறு. வாதி மற்றும் பிரதிவாதி மேற்கண்ட வீட்டில் அருகருகே குடியிருந்து வந்தார்கள் என்றால் தவறு.

2. வாதியின் தந்தை தர்மர் இறந்த வருடம் தெரியுமா என்றால் சுமார் 30 வருடங்களுக்கு மேலாக இருக்கும். வாதி, பிரதிவாதியுடன் பிறந்தவர்கள் மொத்தம் 4 நபர்கள் என்றால் வாதி தவிர்த்து 3 நபர்கள். அதில் ஒரு நபர் இறந்துவிட்டார் என்றால் ஜான்சன், மதுரை வீரன் ஆகிய இரண்டு நபர்கள் இறந்துவிட்டார்கள். தபசில் சொத்தில் இருந்து சுமார் 500 மீட்டர் தள்ளி நான் குடியிருந்து வருகிறேன் என்று சொன்னால் சரிதான். பிரதிவாதியின் கணவர் ஜூலியஸ் எப்போது இறந்தார் என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. ஜூலியஸ் வாழ்ந்த காலத்தில் எனக்கு அவர் நன்கு பரிச்சயம். அவர் வாழ்ந்த காலத்தில் தபசில் சொத்தில் கடை வைத்து அனுபவத்தில் இருந்தார் என்றால் தவறு.

3. வாதியின் தாயார் அழகம்மாள், ஆழ்வார் திருநகரியில் வசித்து வரும் வாதியின் பெரியம்மா மகள் பேச்சியம்மா வீட்டில் ஒரு வருடம் குடியிருந்து வந்த விவரம் தெரியுமா என்றால் தவறு. வாதி அழகம்மாளிடம் செட்டில்மென்ட் எழுதி வாங்கி கொண்டு அவருக்கு குடியிருக்க வீடும், உணவும், மருந்துகளும் கொடுக்காமல் இருந்து வந்ததால் வாதியின் தாயார்

அவருக்கு எழுதி வைத்த செட்டில்மென்ட் பத்திரத்தில் ரத்து செய்தார் என்றால் ரத்து செய்துள்ளார், ஆனால் அவரது கடைசி காலம் வரை வாதி தான் அவரை கவனித்து கொண்டார்.

4. வாதி தனது தாயார் அழகம்மாளை சரியாக கவனிக்க வில்லை என்பதால் பிரதிவாதி அழகம்மாள் இறப்பதற்கு முன்னர் இரண்டு முறை உடல் நிலை சரியில்லாமல் சென்ற போது பிரதிவாதி தான் மருத்துவமனைக்கு அழைத்து சென்று கவனித்து கொண்டார் என்று சொன்னால் தவறு. செட்டில்மென்ட் பத்திரத்தை வாதியின் தாயார் ரத்து செய்ததால் வாதிக்கும் பிரதிவாதிக்கும் சேர்த்து 1/4 பங்கு பாத்தியம் உள்ளது என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது.

5. வாதியின் தாயார் அழகம்மாள் தான் வாழ்ந்த காலத்தில் சுய சிந்தனையோடு எந்தவிதமான வற்புறுத்தலும் இன்றி மனப்பூர்வமாக வாதிக்கு எழுதிய செட்டில்மென்ட் பத்திரத்தை ரத்து செய்தார் என்று சொன்னால் ரத்து செய்தது உண்மை தான் ஆனால் மனபூர்வமாக இல்லை, வேறு மாதிரி கூறி அழைத்து சென்றுள்ளார்கள். ரத்து செய்த விஷயமாக வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பாக வாதி காவல் துறையில் புகாரோ அல்லது மாவட்ட பதிவு துறையில் புகார் ஏதேனும் கொடுத்துள்ளாரா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

6. தபசில் சொத்தில் கட்டியுள்ள வீடு பிரதிவாதி கட்டிய வீடு என்று சொன்னால் மணி என்ற கான்ரக்டர் மூலமாக வாதி தான் அதை கட்டினார். அவ்வாறு சொல்வது தவறு என்றால் சரியல்ல. நான் வாதிக்கு நீண்ட கால நண்பராக இருப்பதால் அவருக்கு ஆதரவாக நான் இவ்வழக்கில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றும் அதனால் என்னுடைய சாட்சியம் ஏற்றுக் கொள்ளதக்கது அல்ல என்றால் தவறு.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு வாசித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டது.

Deposition uploaded on 23.06.2026
VENKATACHALAM MONIKA
Digitally signed by VENKATACHALAM MONIKA
Date: 2026.06.23 15:03:53 +0530

**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி**
**திருநெல்வேலி**